# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS No. 112/2024

dated : 23.09.2025

P.W.1

Name : Raja Rajeshwari

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

என் கணவரின் ஊர் பாப்பாக்குடி ஊரில் உள்ள நந்தன்தட்டை ஆகும். தற்போது தென்காசி சிந்தாமணியில் குடியிருந்து வருகிறேன். நான் சொந்தமாக சிறிய இடம் வாங்கி அதில் குடியிருந்து வருகிறேன். 14 முதல் 17 பிரதிவாதிகளை சேர்த்துள்ளேன், ஆனால் அவர்களை பிரதிநிதித்துவம் படுத்த அரசை தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதியின் மக்கள்தான் 12, 13 பிரதிவாதிகள். 13 ம்பிரதிவாதி வழக்கறிஞர் என்றால் சரிதான். வா.சா.ஆ 2 முதல் வா.சாஆ-7 வரையிலான ஆவணங்களின் மூலம் என் தந்தை சொத்துக்களை கிரையம் பெற்றார். 14.12.2011 ம் ஆண்டில் என் தந்தை இறந்துவிட்டார். அதற்கு முன்பு 2005 ம் ஆண்டில் என் தந்தை நலமாகதான் இருந்தார். என் தந்தை நலமாக இருக்கும் நிலையில் என் தந்தை 07.10.2005 ம் தேதி ஒரு உயில் ஆவணம் எழுதி மாவட்ட பதிவாளரிடம் பாதுகாப்பாக உறையில் இட்டு பாதுகாப்பாக வைத்திருந்தார் என்றால் சரிதான். என் அப்பா இறந்த பின்னர் 1ம் பிரதிவாதி மேற்படி ஆவணத்தினை முறையான சான்றாவணங்களை தாக்கல் செய்து, தென்காசி 1-ம் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து நகல் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல, அவ்வாறு பதிவு செய்ததால்தான் நகல் எடுத்து வந்துள்ளேன் என்றால் சரிதான். அது வா.சா.ஆ-7 என்றால் சரிதான். வா.சாஆ 9- 12 வரையிலான ஆவணங்கள் மேற்படி சொத்தின் ஏற்படுத்தப்பட்ட வில்லங்கம் பற்றிய ஆவணங்கள் என்றால் சரிதான். அதில் என் தந்தையின் உயில் பற்றி கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-8 உயில் ஆவணம் என் தந்தையின் சுயநினைவுடன் பிறர் தூண்டுதல் இன்றி நல்ல நிலையில் இருந்தபோது

சுயவிருப்பத்துடன் எழுதி வைத்த ஆவணம் என்றால் சரியல்ல. அதில் இரண்டு சாட்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளது, அவர்கள் பற்றி எனக்கு தெரியாது, நான் மேற்படி சாட்சிகளிடம் விசாரிக்கவில்லை. சார்பதிவாளரிடம் சென்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். உயில் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். நான் கூறுவது தவறு என்றும், பதிவு செய்யப்பட்டதால்தான் நகல்பெற்றுள்ளேன் என்றும், உண்மைக்கு மாறாக சாட்சியம அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ-8 உயில் ஆவணம் உண்மையானது என்றும், அது என் தந்தை இறந்தபின்னர் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும் அதை கேள்வி எழுப்ப எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் 1ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, 1ம் பிரதிவாதிதான் குடியிருந்து வருகிறார் என்றும், அதை மறைப்பதற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நஞ்சை, புஞ்சை நிலங்களை 1ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது, நான் அனுபவிக்கவில்லை. வா.சா.ஆ.8 உயில் ஆவணத்தினை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவலை வா.சாஆ-14 ஆக தாக்கல் செய்துள்ளேன், அதிலுள்ள விபரங்கள் சரிதான். உயில் பதிவு செய்யப்பட்டுள்ள என்ற விபரம் தெரிந்துதான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு உயில் ஆவணம் பாத்தியப்பட்ட சொத்துக்களை, அவர் 2ம் பிரதிவாதிக்கும், 10, 11 பிரதிவாதிக்கும் ஏற்பாடு மற்றும் கிரையம் செய்து எழுதிக் கொடுத்துள்ளார், உயில் என் தந்தை எழுதி வைத்து அல்ல.

**மறு விசாரணை** : இல்லை

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.09.24 16:55:18 +0530